# ஆத்மஜோதி

ஆனி 1990



கௌரவ ஆசிரியர்: "ஆத்மஜோதி" நா.முத்தையா



சிவமயம்

# ஆத்மஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு



எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே,

— சுத்தானந்தர்.

ஜோதி: 36 பிரமோதூத ஸ்ரீ ஆனி மீ 1-உ ( 15-6-90 ) சுடர் 3

**இந்த இதழில்.........**


| | |
|---|---|
| மாவைக் கந்தனின் பஜனைப் பாடல் | — 69 |
| மாவை முருகன் காவடிப் பாட்டு | — 70 |
| மாருதப்பிரவல்லி அமைத்த ___ | — 72 |
| புண்ணியதானம் | — 76 |
| ஆத்மஜோதி மலரே மலர்க | — 79 |
| கலிகாலம் | — 80 |
| ஓதாமல் ஒருநாளும் . _ | — 82 |
| பிரார்த்தனையின் அவசியமும் __ | — 84 |
| காவடிக் கலை | — 88 |
| தியானம் | — 90 |
| சமய இசைவினை நோக்கி ! | — 93 |
| குகன் | — 96 |
| ஓ ! திராட்சைப் பழங்களே | — 102 |
| பூஜை | — 105 |
| ஆனி மாத நினைவுகள் | — 108 |


**அட்டைப் படம்**

மாவைக் கந்தனின் திருவிழா இம்மாதம் 13-ந் உ ஆரம்பமாகின்றது. சரித்திரப் புகழ்பெற்ற புராதன ஸ்தலத்தின் முகப்புத் தோற்றம் கண்கொள்ளாக் காட்சியாகும்.

## ஆத்மஜோதி சந்தா விபரம்


இலங்கைக்கு மாத்திரம்

| | |
|---|---|
| வருடச் சந்தா | — 60-00 |
| வெளி நாடுகளுக்கு ,, | — 150-00 |
| ஆயுள் சந்தா உள்நாடு | — 1000-00 |
| ,, ,, வெளிநாடு | — 2000-00 |
| தனிப் பிரதி உள்நாடு | — 5-00 |

உ

சிவமயம்

# மாவைக் கந்தனின் பஜனைப் பாடல்

ஆதி மாவைக் கந்தனே வேல் வேல் வேல்
அம்பிகையாள் மைந்தனே வேல் வேல் வேல்
சோதி மயில் வாகனு வேல் வேல் வேல்
சுந்தரியாள் மோகனு வேல் வேல் வேல்.

பன்னிருகை நாதனே வேல் வேல் வேல்
பயம்தீர்க்கும் பாதனே வேல் வேல் வேல்
மன்னுசதுர் வேதனே வேல் வேல் வேல்
மங்கள விநோதனே வேல் வேல் வேல்.

ஆறுபடை ராசனே வேல் வேல் வேல்
அடியவரின் நேசனே வேல் வேல் வேல்
பேறுசுகம் தருபவனே வேல் வேல் வேல்
பிரணவமாய் வருவோனே வேல் வேல் வேல்.

குஞ்சரியாள் நாயகனே வேல் வேல் வேல்
குறவள்ளி நாயகனே வேல் வேல் வேல்
சஞ்சலங்கள் தீர்ப்பவனே வேல் வேல் வேல்
தாளிணையிற் சேர்ப்பவனே வேல் வேல் வேல்.

சிவசுப்ர மண்யனே வேல் வேல் வேல்
செஞ்சேவற் கொடியனே வேல் வேல் வேல்
தவசித்தி நலந்தருவாய் வேல் வேல் வேல்
சண்முகனே குருபரனே வேல் வேல் வேல்.

ஈசனருட் செல்வனே வேல் வேல் வேல்
இளமுருகச் செல்வனே வேல் வேல் வேல்
பேசுமறைச் செல்வனே வேல் வேல் வேல்
பிழைபொறுக்கும் செல்வனே வேல் வேல் வேல்.

— அருட்கவி விநாசித்தம்பி.

# மாவை முருகன் காவடிப் பாட்டு

பொங்குபுகழ் ஆனைமுக வடிவா - உன்றன்
பொற்பாதம் மனதுவைத்தோம் பாலா
செங்கழனி சூழ்அளவை நடுவண் – கோயில்
அமர்காத்த வராயன்சந் நிதியிலிருந்து
துங்கமிகு காவடியை எடுத்து – தொந்த
பந்தமறு மாவைக்கந் தனடிசார
எங்களைநீர் காத்தருள வேணும் – ஞானக்
கொழுந்தாகிப் பரந்தெழுந்த பொருளே.

சிவனம்மை வழிநடத்த நாமே - சிந்தை
மலரிருத்திக் காவடியைத் தூக்கி
நவமாகத் தோளின்மிசை வைத்து - உன்றன்
நலமான இசைபாடி ஆடி
பவத்துயரைப் போக்குபதி மாவைக் - கந்த
சுவாமிபதம் நாடியருள் கூட
தவமானோர் துதிபாடும்
நேயா - நேச
அருள்புரிந்து காத்
தெம்மை ஆள்வாய்.

கார்மகிழும் மயிற்பீலி
கட்டி – வாச
செவ்வலரி மாலைசரம்
சாத்தி
சீர்கொஞ்சும் பட்டா
டைக் குஞ்சம் - சிந்தைத்
துயர்தீரச் சோடனையைச்
செய்து

**விவேகானந்தரின்**
**வீர மொழிகள்**

**என் மகனே! அன்புக்கு என்றும் தோல்வியில்லை. இன்றோ நாளையோ, பல யுகங்களுக்குப் பின்னரோ, வாய்மை வெற்றி பெறுவது உறுதி. அன்பே வெற்றி கொள்ளும். உங்கள் சகோதரர்களிடத்து உங்களுக்கு அன்பு உண்டா?**

ஏர்மிஞ்சும் பாற்செம்பு இணைத்து – பவத்
தளைபோக்கும் காவடியைத் தூக்கி
பேர்பரவும் மாவைநகர் நோக்கி – பாடல்
ஆடலுடன் ஆவலாய் வாரோம்.

பாராதி அண்டமெலாம்
மகிழ - பந்த
பாசங்கள் தூளாகிப்
பறக்க
நேராக மாவையமர்
கந்தா – நின்றன்
சீர்பாதம் கட்புனலால்
ஆட்டி
பேரான காவடியைத்
தூக்கி - பெரும்
பேறெய்தப் பதமலரை
நாடிச்
சீரான சிந்தையுடன்
வாரோம் - சிவன்
அம்மையருள் பாலகனே
ஆள்வாய்.

## விவேகானந்தரின் வீர மொழிகள்

அச்சம் என்பதறியாத இரும்பிலான உள்ளமும் இதயமும் தேவை. குழந்தாய்! நான் வேண்டுவதென்ன தெரியுமா? இரும்பினையொத்த தசைநார்கள். எஃகினை ஒத்த நரம்புகள். இவற்றினுள்ளே இடியேறு போன்ற வலிமையுள்ள மனம். இவையே எனக்கு வேண்டும்.

த. சண்முகசுந்தரம்

## ★ அநுபவ முத்துக்கள் ★

சமூகம் என்பது தேகம் போன்றது என்றும் அச் சமூகத்தைச் சார்ந்தவர்கள் தேக அவயவங்களைப் போல் ஆவார்கள் என்றும். தேக உறுப்புகள் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று உதவி செய்துகொண்டு சந்தோஷமாய் இருப்பதுபோல் மனிதர்களும் மனோ வாக்கு காயங்களால் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து ஆனந்தமாய் வாழவேண்டும்.

## மாருதப்பிரவல்லி அமைத்த மாவிட்டபுரம்

# கந்தசுவாமி கோயில்

( ஆசிரியர் )

கனகசுந்தரி கலிங்கதேசத்து அரசனொருவனுடைய மகள். இவள் மூர்த்தி, தல, தீர்த்த யாத்திரை செய்வதில் விருப்ப முடையவள். அகத்திய முனிவர் வசிக்கும் பொதியமலைச் சாரலில் உள்ள தாமிரவர்ணித்துறைக்கு நீராடக் கனக சுந்தரி வந்திருந்தாள். அங்கு தவம் செய்துகொண்டிருந்த அயக்கிரீவ முனிவரைப் பார்த்து ஏழனமாகச் சிரித்தாள்.

சினம் கொண்ட முனிவர், 'நீ அடுத்த பிறவியில் குன்ம வலியோடு அவலமான முகத்தையும் பெறுவாயாக' என்று சபித்தார். இப்பொழுது தன்னிலையை உணர்ந்த கனகசுந்தரி முனிவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கி தன் பிழை பொறுக்க வேண்டினுள். மனமிரங்கிய முனிவர், "மகளே! கடற்கரைத் தீர்த்தம் ஆடுங்கால் கந்தப் பெருமான் திருவரு ளால் சாப விமோசனம் கிடைக்கும்" என்று கூறித் தன் வழியே சென்ருர்.

★ அநுபவ முத்துக்கள் ★

இஸ்லாம் என்ற சொல்லுக்கே சாந்தி என்று பொருள், எனது அகராதியில் சாந்தி என்பது அஹிம்சை, இந்து மதம், புத்தம், கிறிஸ்தவம், எப்படி சாந்தியைக் குறிக் குஞ் சமயங்களோ அப்படியே இஸ்லாமும் சாந்தி யைக் குறிப்பிடுகின்றது; வாளாயுதம் இஸ்லாத்தின் சின்னமன்று.

— காந்தி —

## மாவையம்பதி அமர்ந்த தெய்வங்கள்

### தண்டாயுதபாணி



சிதம்பரேஸ்வரி சமேத சிதம்பரேஸ்வரர்



முத்துக்குமாரசாமி ( மகோற்சவ மூர்த்தி )



கனகசுந்தரி இறந்து அடுத்த பிறவியில் மதுரைப் பெரு மன்னவன் உக்கிரப் பெருவழுதிக்கு மகளாகப் பிறந்தாள். அவள் அழகு மற்றையோரைக் கவரத்தக்கதாக இருந்தமையால் மாருதப்பிரவல்லி எனவும், அங்கசுந்தரி எனவும் அழைக்கப்பட்டாள். காலஞ்செல்ல முனிவரது சாபம் வேலை செய்யத் தொடங்கியது. படிப்படியே குன்மநோயும் குதிரை முகமும் பெற்ருள். உற்ருர் உறவினர் மக்கள் எல்லோருமே அவளின் சுகத்திற்காகப் பிரார்த்தனை செய்தனர். ஒருமுறை பிரார்த்தனையின் போது "உனது மகள் நற்சுகம் பெற விரும்பினுல் கடலிலும் ஆற்றிலும் சங்கமுகத் துறைகளிலும் நீராடுக" என்று அசரீரி கேட்டது. தனது மகளுக்கும் விடிவு காலம் வரப்போவதை நினைந்து அரசனும் மகிழ்ந்தான்.

அரசனும் தீர்த்த யாத்திரைக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து முடித்தான். பாண்டியநாடு, சோழநாடு, சேரநாடு, தொண்டைநாடு ஆகிய நாடுகள் எல்லாம் தீர்த்த மாடி இறுதியில் சாந்தலிங்க முனிவரைத் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்ருள். முனிவர் அவளுக்கு ஆசிகூறி இலங்கையின் வடபாலுள்ள நகுலேஸ்வரத்தையும் அங்கு வசிக்கும் நகுல முனிவரையும் அங்குள்ள தீர்த்த விசேடத்தையும் அறிமுகம் செய்து வைத்தார். காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்து புறப்பட்ட அங்கசுந்தரி கதிர்காமம் சென்று வணங்கி மாணிக்க கங்கையில் நீராடி வட திசை நோக்கி வந்து நகுலேஸ்வரத்தை அடைந்து கீரிமலைச் சாரலில் வளவர் கோன் பள்ளம் என்னுமிடத்தில் பாளையம் அடித்திருந்தாள்.

**அநுபவ முத்துக்கள்**

நீ சத்தியம் ஒன்றையே தேடுபவனுக இருந்தால் உலகம் உண்மையற்றது என்று ஒப்புக் கொள்வதை விட வேறுவழி உனக்கு இல்லை.

— ரமணர் —

நகுலமுனிவர் பல முனிவர்களுடன் சேர்ந்து தவம் செய்யும் இடம் அறிந்து அங்குச் சென்று நகுல முனிவரையும் மற்றைய முனிவர்களையும் அடிபணிந்தாள். நகுல முனிவர்

தவம் செய்யும் வழியைக் கூறி அவளைத் தவத்தின் வழிப் படுத்தினர். முனிவர்களுடைய ஆசியினாலும் மாருதப்பிர வல்லியின் தபோ முயற்சியினாலும் பூரண சுகம் அடைந்தாள் மாருதப்பிரவல்லி. அவளுடைய குதிரைமுகம் மாறப் பெற் றமையால் கோயில் கடவை என்ற பிரதேசம் மாவிட்ட புரம் என்ற பெயரைப் பெற்று விளங்கியது. (மா - குதிரை: விட்ட - நீங்கிய: புரம் – க்ஷேத்திரம்)

இந்தச் சம்பவத்தின் நினைவாக கோயிற் கடவை கந்த சுவாமி கோயிலைப் புதுப்பிக்க மனங்கொண்டாள் மாருதப் பிரவல்லி. ஆகம சாஸ்திரப் பிரகாரம் இக்கோயிலை அமைக்க முடிவு செய்து, அதற்கு வேண்டிய சிற்பாசாரியர்கள், சிவா சாரியர்கள், சேவகர்கள் இன்னும் மற்றும் வல்லுனர்களையும் திரவியம், பொன், பொருள் ஆகியவற்றையும் அனுப்பி வைக்கும்படி இளவரசி தன் தந்தைக்கு திருமுகம் அனுப்பினாள்.

தன் மகளுடைய பூரண சுகம் அறிந்த பாண்டிய மன் னன் மிக விசேடமான முறையில் கோயில் அமைக்க எண்ணி எல்லாவித ஆயத்தங்களுடனும் காவிரிப்பூம் பட்டினத்திற்கு வந்து அங்கிருந்து விக்கிரகங்கள் உட்பட தேவையான சகல வற்றையும் அனுப்பிவைத்தார். மூலத்தானத்தில் இருந்துஇன் றும் திருவருள் பொழிந்து கொண்டிருக்கும் முருகன், வள்ளி, தெய்வயானை விக்கிரகங்கள் கசாத்துறையை வந்தடைந்தன. முருகனுக்குக் காங்கேயன் என்றொரு பெயரும் உண்டு. காங் கேயனுடைய விக்கிரகங்கள் வந்திறங்கிய துறை ஆனபடி யினால் கசாத்துறை காங் கேயன்துறை ஆயிற்று.

இக் காலப் பகுதியில் இலங்கையை அரசு செய் தவன் உக்கிரசிங்கசேனன் என்பவன். அவன் தனது இராச்சியத்தைச் சுற்றி வரும்போது மாருதப்பிர வல்லியின் தெய்வத் தொண்டையும் அவளை

### சங்கரரின் பொன்மொழிகள்

**அஞ்ஞானம்**

கருமத்தால் அஞ்ஞானத்தை அழிக்க இயலாது; ஏனெனில் அது அஞ்ஞானத்திற்கு விரோ தியன்று. எப்படி ஒளியால் மட்டும் இருளை போக்க இய லுமோ அப்படி ஞானம் ஒன் றினால்தான் அஞ்ஞானத்தை ஒழிக்க இயலும்.

யுங்கண்டு அவள்மீது காதல் கொண்டான். அரசியுடன் தான் பேச விரும்புவதாகத் தூதனுப்பினுன். அவள் மறுத்து விட்டாள். அவள் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது அவளைக் கவர்ந்து தானிருந்த பாளையத்திற்குக் கொண்டு சென்ருன்.

இச்செயலை மிகவும் வன்மையாகக் கண்டித்த அரச குமாரி கோயில் பணி நீறைவுற்றுக் கும்பாபிஷேகம் நடக்கும் வரை திருமணம் என்ற சொல்லுக்கே இடமில்லை என்று மறுத்து விட்டாள். உக்கிரசேனன் தானே முன்னின்று கோயில் திருப்பணியை முடித்து கும்பாபிஷேகமும் நடைபெற உதவியாயிருந்தான். அரச குமாரி தந்தைக்கு அறிவித்து தந்தையின் பூரண சம்மதத்துடன் கதிர்காமத்தில் வைத்து திருமணம் நடைபெற்றது.

**விவேகானந்தரின் வீரமொழிகள்**

**நம்பிக்கையுடனும் பலத்துடனும் உறுதியாக நில். உண்மை. கண்ணியம், தூய்மை, இவற்றைக் கைக்கொள். பொறுமை, தூய்மை, விடாமுயற்சி இவையே இறுதியில் வெற்றிபெறும்.**

ஆனிமாதம் உத்தர நட்சத்திரத்தன்று எல்லா மூர்த்திகளுக்குங் கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. இதைத் தொடந்து இருபத்தைந்து நாள் மகோற்சவங்களும் நடைபெற்றன. அரசகுமாரி ஆடி அமாவாசைத் தீர்த்தம் ஈருக உள்ள எல்லா உற்சவங்களையுந் தரிசித்து ஆலய நிர்வாகம் செவ்வனே நடைபெற்று வரவேண்டிய ஒழுங்குகளைச் செய்துவைத்துத் தீட்சிதரிடம் யாவற்றையும் பொறுப்பளித்து, அவரிடமும் நகுல முனிவரிடமும் ஏனையோரிடமும் விடைபெற்றுக்கொண்டு முக்கிய பிரமுகர்கள் புடைசூழ உக்கிரசிங்கசேனனுடன் கதிரமலைக்கு ஏகினுள்.

# புண்ணியதானம்

தானங்களில் எத்தனையோ உண்டு. அன்னதானம், கோதானம், சொர்ணதானம், பூதானம், ஞான தானம் என்பன அவற்றுள் சில. புண்ணியதானமும் ஒன்று. கர்ணன் கொடையில் சிறந்தவன், மரணத் தறுவாயில் அவன் செய்த தருமம் அவனைக் காப்பாற்றியது. ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, அந்தணர் உருவில் சென்று அவன்செய்த தருமத்தின் பயனைத் தானமாகப் பெற்றுக்கொண்ட பின்தான் கர்ணனை அருச்சுனனால் அம்பெய்து கொல்ல முடிந்தது.

அரசராக இருந்து பேரரசராக வளர்ந்து இராஜ ரிஷியாகத் திகழ்ந்து பெருமை நிரம்பிப் புகழ் பெற்றவர் ஜனக மகாராஜா. ஜனகர் பூத உடலை நீத்தார். மணியணிகள் பூட்டிய திவ்வியமான தேஜோமயமான பொன் விமானமொன்று அந்த மகா புருஷரை ஏற்றிச் செல்வதற்குக் காத்திருந்தது. சுவர்க்கம் புக இருக்கும் புனிதருக்கு அங்கே வரவேற்பு விழா சிறப்பாக நடைபெற ஆயத்தமாகி இருந்தது. பூத உடலைத் துறந்த அவர் ஆன்மா, திவ்விய தேகத்தை அண்டியது. இரதத்தில் அமர்ந்து புறப்பட்டார் ஜனகர்.

### விவேகானந்தரின் வீர மொழிகள்

எழுந்திருங்கள்; உழையுங்கள். இவ்வாழ்வு எத்தனை நாள்? இவ்வுலகில் தோற்றினீரன்றோ? ஆதலின் அதற்கு அறிகுறி ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். அவ்விதம் செய்யா விட்டால் உங்களுக்கும் மரங்கள் கற்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுதான் யாது? அவைகளும் தோன்றி கெட்டு மாண்டு விடுகின்றன.

வழியில் இயமபுரி குறுக்கிட்டது. நரகத்தில் உழன்று, செய்த தீவினைகளுக்கெல்லாம் பயனை அனுபவிக்கும் கொடியவர்கள், வேதனை தாளமாட்டாமல் கதறிக் கொண்டிருந்தார்கள். அவலக் குரல்கள்; அவல ஓலங்கள்.

ஜனகர் இரதத்தை நிறுத்தச் சொன்னுர். அவரது மேனியில் பட்ட காற்று நரகத்தை எட்டியதால் தானே என்னமோ, கூக்குரல்கள் அடங்கின. ஜனகர் இருந்த திசையை நோக்கிக் கை கூப்பி நரகஜீவன்கள் "அபயம்! அபயம்!!" என்று கதறின. புண்ணிய உலகத் தூதுவர்கள் புறப்படும்படி விநயத்துடன் விண்ணப்பித்தார்கள். ஜனகர் பதில் பேசாது இரதத்தை விட்டு இறங்கினுர். நேரே நரக வாயிலை நோக்கி விரைந்தார்.

புண்ணிய புருசரைக் கண்டதும் நரக வாசிகளுக்குப் புத்துயிர் வந்தது. "எங்களைக் காப்பாற்றுங்கள்; கரை ஏற்றுங்கள். இனி தீயவழி செல்லமாட்டோம், பொல்லாமை புரியமாட்டோம்!" என்றெல்லாம் கதறி முறையிட்டார்கள். ஜனகரின் உள்ளம் தழுதழுத்தது. 'நான் இங்கு இருப்பதால் இந்தப் பாவ ஜீவன்களுக்கு நன்மை ஏற்படுமாஞல், நான் இங்கேயே தங்கிவிடுவதுதான் தர்மம். பிறர்பிணி நீக்குவதைவிட வேறெந்தச் சிறப்பு நமக்கு வேண்டும். எனக்குச் சொர்க்கபோகம் வேண்டாம். பிறருக்கு உதவ இயலாத அந்தச் சுகபோகம் என்க்கு எதற்கு? பிறர்க்குப் பணி புரிந்து

### விவேகானந்தரின் வீர மொழிகள்

உமது விதியைப் படைத்தவர் நீங்களே என்பதை உணருங்கள். உங்களுக்கு வேண்டிய முழுப்பலமும் முழுத்துணையும் உங்களுக்குள்ளேயே இருக்கின்றன. ஆதலின் எதிர்கால வாழ்வை உமது விருப்பப்படியே அமைத்துக் கொள்ளுங்கள்.

வாழும் நல்வாழ்வை எந்த உலகத்தில் பெற்றுல்தான் என்ன? அதன் சிறப்பே தனிதான்.' இதே எண்ணம் தீர்மானமாகி விடவே ஜனகர் நரகபுரியில் வசிக்கத் தொடங்கி

விட்டார். தர்ம தேவதையான காலதேவன் இந்தச் செய்தியைக் கேட்டதும் திகைத்து, ஓடோடி வந்தார். வணங்கி வரவேற்ருர் ஜனகரை.

"சுவாமி! தேவரீர் இங்கு எதற்காக எழுந்தருள வேண்டும்? தர்மத்தின் உறைவிடமான தாங்கள் இங்குள்ள பாவிகள் கூட்டத்தைப் பார்க்க வேண்டாம். பார்த்தால் விசனம் வேதனைப் படுத்தும். திரும்பிச் செல்லுங்கள். புண்ணிய உலகம் உங்களைப் பெருமையுடன் வரவேற்கக் காத்திருக்கிறது. புறப்படுங்கள்." என்று வேண்டினர்.

**விவேகானந்தரின் வீர மொழிகள்**

**எப்போதும் தன்னம்பிக்கையை வளருங்கள். தீரச் சிறுவர்காள்! நீங்களனைவரும் அரும் பெருங் காரியங்களைச் செய்யப் பிறந்தவர்கள் என்று நம்புங்கள்.**

ஜனகருக்குக் குதூகலம். "தர்மராஜா! எவ்வகைத் தீச் செயல்கள் புரிவதால் மனிதர்கள் நரகத்திற்கு வந்து சேருகிருர்கள்?' என்று வினவினர்.

இமயதேவர் பதில் சொன்னர். "கொலைபாதகம் புரிந்த பாவிகளுக்கு இதுதான் இடம். மிகக் கொடூரமான தண்டனைகளை அவர்கள் இங்கே அனுபவித்தாக வேண்டும். மேலும், பிறர் பொருளை வஞ்சித்து அபகரித்தவர்கள், புறம்பேசி ஏசித் திரிபவர்கள், நம்பினவர்க்குத் துரோகம் செய்தவர்கள், பண ஆசை பிடித்து உற்ருர் உறவினருக்குப் பொல்லாங்கு செய்தவர்கள், நெறிமிக்க பண்பு மனைவியரை ஒதுக்கி பிறர்மனை புகும் இழியவர்கள், மமதை, செருக்கு, அறிவீனம் காரணமாக பரம்பொருளை நினையாது, மதியாது இருப்பவர்கள், இப்படிப் பலதரத்தாரும் இங்கே உரிய தண்டனைகளைப் பெற வந்து சேருகிருர்கள். பலப்பல பிறவிகள் எடுத்தும் இங்கேயே உழல வேண்டியவர்கள் அவர்கள்!"

(தொடரும்)

# ஆத்மஜோதி மலரே - மலர்க

( திருமதி. ந. பார்வதி )

அன்பு மலர்ந்த அருளாளர்
ஆர்வம் கொண்டே அயலவர்க்காய்
இன்பம் பயக்க இன்னருளை
ஈந்தே போதித்தார் மலர்மூலம் !

உலகம் போற்றும் மலராக
ஊன்றிக் கருத்தை உட்கொண்டாய்
என்றும் உன்னைப் பார்ப்பவர்கள்
ஏத்தி மனதில் நிலைகொள்வாய்!

ஐந்து பொறிக்கும் உணவாக
ஒன்று சேர்த்தாய் உன்னகத்தே
ஓடும் மனதை நிலைப்படுத்த
ஓங்காரமாக நீ யுதித்தாய் !

ஔவை பாடல் நிகர்த்துள்ளாய்
அஃகமும் காசும் அருகிடினும்
ஆத்ம தீபம் பெருகிடவே
ஆத்ம ஜோதியாய் நீ வந்தாய் !

ஏனோ இடையில் நீ நின்றாய்
எல்லோர் நிலையும் கலங்கியதே
மதியிலோர் மனத்தின் மதத்தாலே
மலரே நீயும் நின்றுயோ ?

எண்பத்து மூன்றில் நின்றுயே
எழில் தொண்ணூறில் மலர்ந்தாயே
மறுபிறப் பெய்திய மலரேநீ
மகிழ்ந்து பொலிந்து வாழியவே !

# ★ கலிகாலம் ★

துவாபரயுகம் அதன் ஆட்சியின் அஸ்தமனத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. கலியுகம் தன் எழுச்சிக்கான ஆயத்தங்களில் முனைந்திருந்தது. பாண்டவர் திலகம் தர்மபுத்திரர் ஒருநாள் தம் அமைச்சரிடம் துயரத்துடன் சொன்னார். '' கலிகாலம் படையெடுக்கத் தொடங்கிவிட்டது. என்னிடத்திலேயே வந்து '' சுவாமி! இனி என் ஆட்சிக் காலந்தான், தயைசெய்து நீங்கள் ஆட்சிப் பீடத்திலிருந்து விலகி ஓய்வு கொள்ளுங்கள்.'' என்று கூறியது. இனி நமக்கு இங்கே இடமில்லை.

### ★ ஆன்றோரின் அநுபவமொழிகள் ★

மனமே,

ஒருசொல், ஒருவில், ஒருஇல் (மனைவி) என்பதை விரதமாகக் கொண்டவன் (இராமன்) ஒரே மனதையுடைய அவனை ஒருநாளும் மறவாதே. நீண்ட ஆயுளும் மூதுமையற்ற நலமான வாழ்வும் கொடுப்பவன். அவன் இவ்வுலகில் நடமாடும் தேவன். தியாகராஜன் வழிபடும் தெய்வம். — **மகான் தியாகராஜர்**

மநதிரிக்கு இது விசித்திரமாக இருந்தது! " சுவாமி! தாங்களோ தர்மத்தின் அவதாரம். காலம் உங்களை எப்படிச் சந்திக்கத் துணிந்தது? உங்கள் எதிரேவர அதற்குத் தகுதி கிடையாதே " என்று கேட்டார்.

'' ஒருநாள் கலிகாலம் மனித உருவத்தில் வந்தது. அதைச் சந்திக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. என் தம்பிகள் நால்வரும் சபைக்கு வந்து கொண்டிருந்தார்கள். மாளிகை வாயிலில் ஒரு குதிரைக்காரன், மிக அழகான குதிரை ஒன்றை வைத்துக்கொண்டு நின்றான். அதைப் பார்த்ததுமே என் தம்பிகளுக்கு எப்படியாவது

குதிரையை வாங்கிவிடவேண்டும் என்று தோன்றியது. "குதிரை விற்பனைக்கா?" என்று கேட்டார்கள்

"நான் விற்பதற்காகத்தான் கொண்டுவந்திருக்கிறேன்." என்று அவன் சொன்னதும், என் தம்பிகளுக்கு அபார உற்சாகம். "குதிரையை எங்கள் லாயத்தில் கொண்டு போய் கட்டிவிட்டு பொக்கிஷ அதிகாரியிடமிருந்து உனக்கு வேண்டிய பொருளைப் பெற்றுக்கொள்." என்றார்கள். குதிரைக்காரன் என்ன சொன்னான் தெரியுமா? "மகாராஜா; எனக்குப் பொற்காசுகள் தேவையில்லை, நான்கு கேள்விகள் கேட்பேன். அவைகளுக்குப் பதில் சொல்லுங்கள்; போதும், குதிரையைக் கொடுத்துவிடுகிறேன்." என்றான்.

என் தம்பிமாருக்கு இது வேடிக்கையாக இருந்தது. கேவலம் ஒரு குதிரைக்காரன் கேள்விகளுக்கா நம்மால் பதில் சொல்ல முடியாது என்று எண்ணி, "சரி, என்ன கேள்விகள்? நாங்கள் பதில் சொல்லுகிறோம்."என்றார்கள். குதிரைக்காரன் சாதாரண ஆசாமி இல்லை என்பதை தம்பிமார்கள் அறியவில்லை. அவன் சொன்னான்."பதில் சொல்ல முடியாவிட்டால், ஒரு நிபந்தனை. அதற்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்." என் சகோதரர்கள் ஒப்புக்கொண்டார்கள். குதிரைக்காரன் விதித்த நிபந்தனை: "நீங்கள் பதில் சொல்லாவிட்டால் நான் ஒரு வட்டம் போடுவேன், அதற்குள்ளேயே உங்களுள் ஒருவர் நிற்கவேண்டும். வெளியே போகக்கூடாது. ஒவ்வொரு கேள்விக்கும் ஒவ்வொரு வட்டம் போடுவேன். நான்கு கேள்விக்கும் பதில் தரமுடியாவிட்டால், நீங்கள் நால்வரும் வட்டங்களுக்குள் அடைபட வேண்டியிருக்கும்."

என் சகோதரர்களுக்கு துணிச்சல் அதிகம். தன்னம்பிக்கையுடன் நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டார்கள். குதிரைக்காரன் முதல் கேள்வியைக் கேட்டான். ஒருவராலும் பதில் சொல்ல முடியவில்லை. நிபந்தனைப்படி ஒருவர் வட்டத்துள் நிற்கவேண்டியதாயிற்று.

(தொடரும்)

**விவேகானந்தரின் வீரமொழிகள்**

**உமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரராகுக. ஒரு பாறையைப் போன்று உறுதியாக நிற்பீராக. மெய்யே என்றும் வெல்லும்.**

# உலகநீதி

## * ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்

### ( முத்து )

நூல்களைப் படிக்காது ஒருநாளாவது இருக்கக்கூடாது என்பது சாதாரண பொருள். நூறுநாள் ஓதி ஆறுநாள் விடத் தீரும் என்பதன்படி எவ்வளவு பெரிய கல்விமானு ஞலும் தினமும் படித்துக்கொண்டே இருக்கவேண்டும். அங்ஙனம் படிக்காலிட்டால் படிப்படியாகப் படித்ததெல்லாம் மறக்கவேண்டிவரும்.

**விவேகானந்தரின் வீர மொழிகள்**

**கோழைகள் தாம் பாவம் புரிவர். அஞ்சாமைஉடையவர் ஒருகாலும புரியார்.**

" பாடை ஏறினும் ஏடது கைவிடேல் " என்பது இன்ஞெரு பழமொழி. அதாவது மொழியிலே பாண்டித்தியம் பெற்ற பண்டிதன் ஆனுலும் எல்லா நாளும் படிக்க வேண்டும் என்பது கருத்து. அந்தக் காலத்தில் அதாவது கடுதாசியும் அச்சியந்திரமும் பரிச்சயத்திற்கு வருமுன்பு பனை ஓலைகளின் ஏடுகளிலே தான் எழுத்தாணியால் நூல்கள் எழுதப்பட்டன. அதனுல் அந்த நூல்களுக்கு ஏடுகள் என்று பெயர் வந்தன. அதாவது இறக்கும் வரை படிக்கவேண்டும் என்பது கருத்து. இதனை இன்ஞெரு கருத்தும் வலியுறுத்துகின்றது. இறந்தபின் பிணத்தைப் பாடையிலேதான் கொண்டு செல்வார்கள். " பேரினை நீக்கி, பிணம் என்று பேரிட்டு " என்பார் திருமூலர். பேராயிரவர் என்ருெரு பெயருடையவர் இருப்பார். அவர் இறந்த உடனே பெயரும் அழிந்து விடுகிறது. சத்துப்

---

* **" உலக நீதி"** தொடர் கட்டுரைகளில் முதலாவது கட்டுரை.

போன உடனே செத்துப் போனுன் என்று சொல்வது மரபு. இப்பொழுது அந்த உடலுக்குப் பிணம் என்று பெயர். பிணத்தை எதன் மீது படுக்கவைத்துத் தூக்கிச் செல்கின்ருர்களோ அதற்குப் பாடை என்று பெயர்.

எட்டு அடி நீளமான கமுகமரத்தை இரண்டாகப் பிளந்து இரண்டு அடி அகலத்தில் அவை இரண்டையும் வைத்துப் பிணைப்பார்கள். பச்சைத் தென்னேலையை இரண்டாகப் பிளந்து இரண்டு மட்டைகளும் இரு பக்கமாக இருக்க இடையே இரண்டு அடி அகலம் இருக்க பாய்போலப் பின்னுவார்கள். இதற்கே பாடை என்று பெயர். பாடை ஏறுவது எப்போது? இறந்த பின்பு. இறந்தாலும் படிப்பைக் கைவிடாதே என்பது கருத்து.

வாய்விட்டு உரத்து வாசித்தலுக்கு வாசிப்பு

(தொடரும்)

## ஆன்ஞேரின் அநுபவ மொழிகள்

உலகின் மீது பற்றுக் கொண்டவனுக்குக் கடவுள் மீது பற்று ஏற்படாது. கடவுள் மீது பற்றுக் கொண்டவனுக்கு உலகின் மீது பற்று ஏற்படாது.

இதனையே கபீர்தாசரும் ராமன் உள்ள இடத்தில் காமன் இல்லை; காமன் உள்ள இடத்தில் ராமன் இல்லை என்ருர். உலகில் பற்று இல்லாமல் எப்படி வாழ்வது? என்பது கேள்வி. அதற்குப் பதில். ஆண்டவனைப் பற்றி வாழ்ந்தால் மட்டுமே உலகப் பற்றுக் களிலிருந்து விடுபடலாம்.

கிழக்கு நோக்கிச் செல்லச் செல்ல மேற்கிலிருந்து விடுபடுவது போல இறைவனைக் குறித்த சிந்தனைகளிலேயே ஆழ்ந்து ஆழ்ந்து செல்லும் அளவுக்கு உலகப் பற்றுக்கள் மனிதனிடம் குறைய ஆரம்பிக்கின்றன.

— சுவாமி கமலாத்மானந்தர்

# பிரார்த்தனையின் அவசியமும் கடவுள் நம்பிக்கையும்

( மகாத்மா காந்தி அவர்களின் கட்டுரையின் மொழிபெயர்ப்பு )

சொந்த முறையிலும் பொதுஜன ஊழியன் என்ற முறையிலும், நான் கடுமையான கஷ்டங்களை அநுபவிக்க நேரிட்டமையை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அவ்வப்போது திடீர் திடீர் என்று ஏக்கம் பிடிக்கும். அப்போதெல்லாம் பிரார்த்தனை செய்வேன். எனது ஏக்கம் பறந்துபோய்விடும். ஆனால் சத்தியத்தை நான் எவ்வளவு எனது வாழ்க்கையில் கொண்டிருக்கிறேனோ, அவ்வளவு தூரம் நான் பிரார்த்தனை செய்வது ஓர் அவசியமாக எனக்கு ஏற்பட்டிருக்கிறது.

**விவேகானந்தரின் வீரமொழிகள்**

ஓர் அடிமையின் நெற்றியில் இயற்கை எப்போதும் இடும் குறியாகிய பொருமையாம் மாசினைத் துடைத்து விடுவோமாக. ஒருவரிடத்தும் பொருமை கொள்ளாதே நன்மை செய்வோன் ஒவ்வொருவனுக்கும் கைகொடுக்கத் தயாராய் இரு.

பிரார்த்தனை செய்யச் செய்ய கடவுள் பக்தி அதிகமாயிற்று. ஆதலால் பிரார்த்தனை செய்வதில் ஒரு ஆசையும் ஆனந்தமும் ஏற்படத் தொடங்கிற்று. பிரார்த்தனை இல்லாத பொழுது உயிர்வாழ்வதே ரசமற்றுப் போயிற்று. உடலுக்கு உணவு எவ்வளவு அவசியமோ, அவ்வாறே ஆத்மாவுக்குப் பிரார்த்தனை அவசியம். உடலுக்கு உணவை விட ஆத்மாவுக்கு பிரார்த்தனை கட்டாயம் வேண்டுமென்று கூடச் சொல்லலாம். புத்தர், யேசுநாதர், முகம்மது நபி முதலிய பெரியோர் பிரார்த்தனையினால் தாம் முன்னேறியதாகக் கூறியிருக்கிறார்கள். பிரார்த்தனையின்றி உயிர்வாழ முடியாதெனவும் கூறியிருக்கிறார்கள்.

இப்போது கோடிக்கணக்கான இந்துக்களும். முசல்மான்களும், கிறிஸ்தவர்களும் பிரார்த்தனை செய்தே கவலையை

நீக்கிக் கொள்கிறார்கள். அவர்களைப் பொய்யர்கள் என்றும் ஏமாந்தவர்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால், இந்தப் பொய்தான் எனது உயிருக்கு இன்றியமையாததாக இருக்கிறது. சத்திய உபாசகனான எனக்கு உயிர் போன்றுள்ள பிரார்த்தனை பொய்யாகுமா?

ராஜீய வானத்தில் ஏக்கமென்னும் மேகம் சூழும் போதும் எனது மனச் சமாதானத்தை நான் இழப்பதில்லை எனது சமாதானத்தைக் கண்டு அநேகர் வியந்ததுண்டு அந்தச் சமாதானம் எங்கிருந்து வருகிறது? பிரார்த்தனையிலிருந்துதான். நான் படித்தவனல்ல; நான் வெறும் பிரார்த்தனைக்காரன் என்று தாழ்மையோடு சொல்லிக் கொள்கிறேன். அவரவர் மனோதர்மப்படி பிரார்த்தனை நடத்தலாம் என்பது எனது அபிப்பிராயம். ஆனால் நமது முன்னோர்கள் நடந்து சென்ற பழைய பாதையில் நாமும் செல்வது சுலபமெனத் தோன்றுகிறது.

## விவேகானந்தரின் வீரமொழிகள்

உங்கள் சகோதரருக்குத் தலைமைவகிக்க முயலற்க! அவர்களுக்கு ஊழியமே செய்க! தலைமை வகிக்கும் பைத்தியமானது வாழ்க்கை என்னும் கடலில் எத்தனையோ பெரிய கப்பல்களை எல்லாம் மூழ்கடித்து விட்டது. மரணம் நேரிடினும் சுயநலம் வேண்டாம். தொண்டினை மறவாதீர்.

கடவுளிடத்தில் நம்பிக்கை தோன்றுமாறு பிறருக்குப் போதனை செய்ய நானறியேன். சிலவற்றைக் கண்கூடாகக் காட்ட முடியும்; சில தானே விளக்கமாகும்; சிலவற்றை ஒருபோதும் காட்டமுடியாது. க்ஷேத்திர கணித சாஸ்திரத்தில் அடிப்படையான அம்சங்கள் சிலவுண்டு. அதேபோலக்

கடவுளின் சத்தியம் அடிப்படையான ஒரு உண்மை. மனித இதயத்தின் சக்தியைக் கொண்டு அவரை அறிய முடியாமலிருக்கும்.

**விவேகானந்தரின் வீரமொழிகள்**

உலகிற்கு நன்மை செய்வதே நமது நோக்கம். நமது பெயர்களைப் பறையறைவதன்று.

அறிவினுல் ஆண்டவனை அறிவதைப் பற்றிப் பேசவே இடமில்லை. எங்கும் உறையும் இறைவனை உணருதற்குப் பிரத்தியட்சப் பிரமாணம் கொடுப்பது எவ்வளவு முடியாதோ, அம்மாதிரியே அறிவினுலும் ஆண்டவனை அளக்க முடியாது. ஏனெனில், அவர் காரணங்களையும் காரியங்களையுங் கடந்தவர்.

கடவுள் உண்டு என்று மெய்ப்பிக்க ஏதேதோ சொல்லப்படுகின்றன. ஆனுல், ஒரு சிறு குழந்தை எவ்வாறு தாயினிடம் நடந்து கொள்ளுமோ, அதே மாதிரி பகவானிடத்தில் திடநம்பிக்கையோடு நான் வாழ்கிறேன். நானிருப்பது உண்மையானுல், என்னைப் படைத்த பகவானும் இருக்கிருர் என்பது எனது உறுதி. உலகில் கோடிக் கணக்கானவர்களுக்கும் இதேமாதிரி உறுதியுண்டு. பகவானை வர்ணிக்கவோ, அவரது அனந்த கல்யாண குணங்களை விவரிக்கவோ எல்லோராலும் முடியாமலிருக்கலாம். ஆனுல், அவர்களுடைய வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினுல் பகவத் பக்தி அதில் ஊடுருவி ஓடுவதை ஒவ்வொரு செய்கையிலும் காணலாம்.

நம்முடைய நம்பிக்கையை மூடியிருக்கும் மாயையைத் தொலைக்க வேண்டும். அதாவது, நமக்கு ஆண்டவனிடத்தில் நம்பிக்கை ஏற்பட வேண்டுமானுல், நாம் இதுவரை உலகில் படித்துள்ள படிப்புக்களை மறந்துவிட வேண்டும். அவை நமது அறிவை மயக்கி வழிதெரியாத இடத்தில் கொண்டு போயிருக்கின்றன. இப்போதைய படிப்பை மறந்தால், நமக்கு வழி தானே புலனுகும். மெய்யடக்கத்தோடும் நமக்கு

ஒன்றுந் தெரியாது என்ற எண்ணத்தோடும் ஒரு நம்பிக்கை யோடும் நாம் நடக்கத் தொடங்கவேண்டும்.

அகண்டமான இந்த அண்ட கோசத்தில் மனிதப் பிறவி எடுத்த நாம் அணுவினும் மேலாக வாழ்ந்து வருகிறோமல்லவா? அணுவாவது அதற்கிடப்பட்டுள்ள சட்டப்படி நடக்கும். நாம் இயற்கையை எதிர்ப்பவர்களாதலால் இன்னும் கேவலமானவர்களாக வாழ்கின்றோம். ஆனால் நம்பிக்கை இழந்தவர்களுக்கு நான் ஒன்றும் சொல்லமுடியவில்லை.

கடவுளை நம்புவோர் பிரார்த்தனை செய்யவேண்டும். பிரார்த்தனை அத்தியாவசியம். அவ்வப்போது நாம் பகவத் பக்தியை அதிகமாக்கிக் கொள்வதற்காகவே குறிப்பிட்ட நேரங்களில் குறிப்பிட்ட விதத்தில் பெரியோர் பிரார்த்தனையினால் நமது வாழ்வில் ஏற்படும் கஷ்டம் என்னும் மாயையினின்று நாம் விடுபடுவோமென நான் உறுதி கூறுகிறேன்.

**விவேகானந்தரின் வீர மொழிகள்**

எவருடைய உள்ளம் வறுமையில் வாடுபவர்களைக் குறித்து வருந்துகிறதோ அவரையே யான் மகாத்மா என்பேன். இல்லாவிடில் அவர் துராத்மாவே.

**ஆன்றோரின் அநுபவ மொழிகள்**

பரமேஸ்வரா, தன்னிடத்திலுள்ள குற்றத்தைப் பார்ப்பதில் புத்திக் கூர்மையும் பிறருடைய குற்றத்தைக் காண்பதில் மூடத்தனமும் பிறருடைய குணத்தில் அதிகச் சந்தோஷமும் தன்னிடத்திலுள்ள குணத்தைப் புகழ்ந்து கொள்ளாமல் இருப்பதும் எல்லாப் பிராணிகளிடத்திலும் இரக்கமும் பரந்த நோக்கத்தோடு பிறரிடம் அன்பும் உறுதியான பக்தியும் என்னிடத்தில் எப்பொழுது உண்டாகும்?!

"பக்தன்"

# ★ ★ ★ காவடிக்கலை ★ ★ ★

தமிழ்க் கலைகளை வேத்தியல், பொதுவியல் என்ற இரண்டு பிரிவிலே பிரித்துப் பார்ப்பது வழக்கம். பொதுமக்களின் கலை பொதுவியலில் அடங்கும். பொது மக்களின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளே பொதுவியற் கலைகள் தோன்றுவதற்குக் காலாய் இருந்தன. பொதுவியற் கலைகளே மெருகு பெற்றுக் காலகதியில் வேத்தியல் ஆயின. கலைக்கும் கடவுள் வழிபாட்டிற்கும் தமிழில் நெருங்கிய தொடர்புண்டு.

கிராம மக்களின் வாழ்க்கையிற் கடவுள் வழிபாடு மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றது. பண்டைக்காலத் தமிழ் மக்கள் தமக்கென வீட்டைக் கட்டினர். இது ''இல்'' ஆயிற்று. அம்மக்கள் கடலை நோக்கினர்; மலையை நோக்கினர்; ஆற்றை நோக்கினர்; வயலை நோக்கினர்; காட்டை நோக்கினர். அந்த நோக்குக்கு அப்பால், காலத்தால் அழியாத வலுவுடைய பெரும்பொருள் உண்டு என்பதை உணர்ந்தனர். அதற்குக் 'கோ' என்ற பெயரைக் கொடுத்தனர். அந்தப் பெரும் பொருளுக்கு 'இல்' ஒன்றை அமைத்தனர். அது கோயில் ஆயிற்று.

"கோ'' என்னுமிடத்து முருகன் என்ற கடவுளைப் பற்றிக் குறிப்பிடல்வேண்டும். தமிழ் மக்களுக்குச் சிறப்பான கடவுள் முருகன். பழந்தமிழ் இலக்கியங்களில் முருகனைப்

---

**● அநுபவ முத்துக்கள் ●**

தீமையைச் செய்பவனும் தானே; அதனால் தன்னையே மாசுபடுத்திக் கொள்பவனும் அவனே. தீமையைச் செய்யாது தன்னைத் தூயனாக்கியவனும் தானே. எனவே, ஒருவனது சுத்தமும் அசுத்தமும் அவனையே பொறுத்துள்ளன. எவனும் தன் சொந்த முயற்சியின்றி இன்னொருவனால் பரிசுத்தனாவதில்லை.

— பகவான் புத்தர்.

---

பற்றிய குறிப்புகள் நிறைய உண்டு. முருகனே அழகுக் கடவுளாயினன். இவனே தமிழ்க் கடவுளும் ஆயினன். இவனே "வேலேந்தும் செவ்வேள்" ஆயினன். "வினையைக் கடிவது வேல்" என்ற மெய்ப்பொருள் பிற்காலத்தில் வலியுற்றது. குழந்தை வடிவேல் என்ற பெயருமுண்டாகியது.

கோவிற்கு இல்லம் அமைத்த தமிழ் மக்கள் தங்கள் இன்ப துன்பங்களையெல்லாம் அந்தக் கோவிலின் முன்னர்ச் சென்று ஒப்படைத்தனர். துன்பங்களைக் கூறி முறையிட்டனர். தங்கள் முட்டுத்தீர அழுதனர்; புலம்பினர். வயல் விளைய மழைவேண்டும்; வெயில் வேண்டும்; காற்று வேண்டும். இவற்றை இயக்குவிக்கவும் வருவிக்கவும் பெரும் பொருள் ஒன்று உண்டு என்பதைத் தமிழ் மக்கள் உணர்ந்தனர். பகலவன் பெரியவன். அவனிலும் பார்க்கப் பெரியவன், கோயில் கொண்டருளும் பெரும் பொருள். வயலிலே, தோட்டத்திலே விளைந்தவை யாவும் பெரும் பொருளின் அருளால் விளைந்தவை. எனவே, அப்பொருட்களைக் கோயிலுக்கு எடுத்துப் படையல் செய்தனர். பண்டைய மக்கள் புது நெல்லையும் தினையையும் எடுத்துப் பொங்கல், படையல் செய்தனர்.

## ஆன்றோரின் அநுபவ மொழிகள்

பூஜையில் இரண்டு விதமான முறைகள் உண்டு. ஒன்று, புறப்பார்வையால் ஆடம்பரமான பூஜையில் மலர்களைக் கொண்டு பூஜை செய்வது. மற்றொன்று: அகக் கண்கொண்டு கடவுளைச் சிந்தையிலிருத்திப் பிறிதொன்றும் நினையாமல், யாருக்கும் தெரியாமல் மனதை ஒரு நிலைப் படுத்திக் கடவுளை நினைப்பது.

— சிருங்கேரி சுவாமிகள்.

"உன் அருளாலே விளைந்தவற்றை உனக்குப் படையல் செய்கிறேன்" என்பதே படையலின் நோக்கம். அப்படிப் பொருள்களை வீட்டிலே இருந்து கோயிலுக்கு எடுத்துச் செல்ல காவு தடிகளைப் பயன்படுத்தினர். இந்தக் காவு தடி

(தொடரும்)

# தியானம்

நாத யோகியான நாரதருக்கு எப்போதுமே தம் பக்திச் சிறப்பில் பெருமை உண்டு. மெய்ம் மறந்து அவர் பகவானைப் பாடித் துதிக்கும்போது தெய்வமே சொக்கி நிற்கும். பரம பக்தர்களுள் நாரதரும் ஒருவர் என்ற புகழ் எங்கும் பரவி இருந்தது. நாரதருக்குத் தம் மாதிரித் தெய்வத்தைத் தியானம் செய்யும் பக்தன் எவ்வுலகத்திலும் கிடையாது என்ற கர்வம் தலைதூக்கியது. வாயாலும் உள்ளத்தாலும் பகவானைப் போற்றுவதே அவருக்குப் பொழுதுபோக்கு.

திருமாலுக்கு நாரதரின் கர்வத்தைக் குறைக்கவேண்டும் என்று தோன்றியது. ஒருநாள் நாரதரைப் பார்த்து, "பூவுலகில் ஒரு குடியானவன் இருக்கிறன். அவனிடத்தில் தேவலோக வாசிகள் கூட தியானயோகத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்." என்று புகழ்ந்தான். நாரதருக்கு இது குத்தலாக இருந்தது. தமக்கும் சேர்த்துத்தான் இப்படிச் சொல்லுகிறரோ என்று நாரதருக்கு நெஞ்சு குறுகுறுத்தது. "சுவாமி! நான் அந்த பக்த சிரேஷ்டனைத் தரிசிக்க வேண்டும்." என்று கேட்டார்.

திருமால் அந்த ஏழை உழவன் இருக்குமிடத்தைத் தெரிவித்தார். நாரதர் உடனே பூவுலகு வந்து சேர்ந்தார். மாறுவேடத்தில் நாரதர் ஒரு குக்கிராமத்தில் வசித்துவந்த குடியானவனின் குடிலுக்கு வந்து சேர்ந்தார். விருந்தாளியை வரவேற்று உபசரித்தான் உழவன். விடிகாலையில் எழுந்ததும் பகவானைத் துதித்தான் குடியானவன். பிறகு, ஏர் பூட்டிக் கொண்டு உழுவதற்குப் புறப்பட்டான். பகல் முழுவதும் நிலத்தில் அயராது உழைத்தான். மாலை மயங்கியதும் வீடு

**விவேகானந்தரின் வீர மொழிகள்**

இலட்சியம் உடையவன் ஆயிரம் பிழைகள் புரிவனுயின், இலட்சியம் இல்லாதவன் ஐயாயிரம் பிழை புரிவான் என்பது உறுதி. ஆதலின் இலட்சியமுடையராய் இருத்தல் மிகவும் நல்லது.

திரும்பி குளித்துச் சாப்பிட்டுவிட்டுப் படுக்கப் போனான். படுக்கையில் அமர்ந்தபடியே பகவானைத் துதித்துவிட்டுப் படுத்தான்.

நாரதர் பார்த்தார். "இதற்காகவா இவனைத் திருமால் இவ்வளவு பாராட்டினார்?" என்று எண்ணினார். மறுநாளும் அங்கேயே தங்கி இருந்தார். உழவனின் செயல்முறை அப்படியேதான் இருந்தது. அலட்சிய பாவத்துடன் திருமாலிடம் வந்து சேர்ந்தார் நாரதர். "சுவாமி! உங்களுடைய பக்தனைத் தரிசித்தேன். காலையில் ஒருதரம் உங்கள் நாமத்தை உச்சரிக்கிறான். இரவு படுக்கும் போது இரண்டாவது முறையாகத் துதி செய்கிறான். இவ்வளவுதான். இதற்காகவா நீங்கள் இவ்வளவு புகழ்ந்தீர்கள்?" என்றார்.

திருமால் விஷமச் சிரிப்புடன் "சரி. நான் ஒன்று சொல்லுகிறேன். அதன்படி செய்யுங்கள். அதிலிருந்தே நீங்கள் புரிந்து கொள்வீர்கள், நான் அந்த உழவனைப் புகழ்ந்தது தக்கதா? இல்லையா? என்பது" என்றார். "சொல்லுங்கள்; அப்படியே செய்கிறேன்." நாரதர் பறந்தார்.

**விவேகானந்தரின் வீரமொழிகள்**

அடக்கப்படாத மனம், நெறியில் உய்க்கப்படாத மனம் நம்மை என்றென்றும் கீழ் நோக்கியே இழுத்துச் செல்லும். அடக்கப்பட்ட நெறியில் உய்க்கப்பட்ட மனமோ நமக்குப் பாதுகாப்பளிக்கும், விடுதலையைத் தரும்.

"ஒரு குடம் நிறையத் தண்ணீர் நிரப்பிக்கொண்டு என் கோயில் ஒன்றை மூன்றுமுறை சுற்றி வரவேண்டும். ஒரு துளி நீர் கூடச் சிந்தக்கூடாது. பிறகு என்னை வந்து சந்தியுங்கள்.'' என்றார். நாராயணனின் இக்கோரிக்கை நாரதருக்கு விசித்திரமாக இருந்தது. உற்சாகத்துடன் புறப்பட்டார், ஒரு திருக்கோயிலை நோக்கி.

தலையில் நீர்நிறைந்த குடம் இருந்தது. நாரதர் அடிமேல் அடிவைத்து நடந்தார். எங்காவது நீர்சிந்தி விடப் போகி றதே என்கிற கிலிதான் அவர் உள்ளத்தில் ஊடாடிக் கொண்டிருந்தது. குடம், குடத்துநீர் - இதே நினைவுதான்.

நல்லகாலம், நாரதர் துளிநீர் கூடச் சிந்தாமல் வலம் வந்து சேர்ந்தார். விருப்புடன் விஷ்ணுவிடம் போய் நின்றார். "இப்போது என்ன சொல்லுகிறீர்கள்?" என்ற தோரணையில். பரந்தாமன் சிரித்துக்கொண்டே, "தண்ணீர்க் குடத்துடன் வரும்பொழுது என்னை எத்தனை தடவை தியானம் செய்தீர்?" என்று கேட்டார்.

தேவரிஷி நாரதர் திகைத்தார். "என்ன செய்வது? சங்கடமான வேலை இருக்கும்போது வேறு நினைவு எப்படி இருக்கும்?" என்று கேட்டார்.

'பெரியவரே! தங்கள் தலையில் இந்தச் சிறுபாரம் இருக் கிறபோதே, தங்களுக்கு வேறுநினைவு எழவில்லை. அந்த ஏழை உழவன் தலையில் பெரிய குடும்ப பாரமே அழுத்தியிருக்கிற போது, அவன் எப்படி எப்போதும் தெய்வத் தியானம்செய்து கொண்டிருக்க முடியும்?'

★ அநுபவ முத்துக்கள் ★

சமரசத்தின் தலைமையானது இந்து சமயமே. ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்தமான மார்க் கத்தைப் பின்பற்றி ஆன்ம விடுதலையைத் தேடு வதற்கு பூரண உரிமை அளிக்கிறது.

— காந்தி.

நாரதருக்கு நாணம் மேலிட்டது. அவர் செருக்கை முழுவதும் அகற்றும் அருள் வாக்கைப் பரமன் கூறினார். "பக்த சிரேஷ்டரே! உண்மையான பக்தி சதா சர்வகால மும் தியானம், கீர்த்தனம் என்று வழிபட்டுக் கொண்டிருப் பதால் மட்டும் ஏற்பட்டுவிடாது. அவை மூலம் மட்டும் பக்தி

மேம்பட்டு விடாது. கடமையைச் செய்துகொண்டு, குறித்த நேரத்தில் மனப்பூர்வமாகத் தியானம் செய்பவன் எந்தப் பக்த சிகாமணிக்கும் குறைந்தவனில்லை. உழவன் காலையிலும் இரவிலும் மட்டும் வாய்விட்டு என்னை வழிபட்டாலும் அவன் உழைக்கும் போதெல்லாம் என்னையே தியானம் செய்து கொண்டிருக்கிறான். நீங்களோ இந்த நீர்க்குடத்தைக் கொண்டுவரும் சிறிது நேரத்திற்குள்ளேயே என்னைத் தியானிக்க மறந்துவிட்டீர்களே! தியான யோகத்தில் உழவனின் நிலைதான் தங்களுக்கும் வழிகாட்டி. உண்மைப் பக்தியும் அதுதான்!"

# சமய இசைவினை நோக்கி!

டாக்டர் என். ஆர். சாஸ்திரி

(மூலம்: சனாதன சாரதி (ஆங்கிலம்) மே, 1987)

பகவான் பாபாவின் மையக் கருத்தினைப் புரிந்து கொள்வதற்கான முக்கியமான முதல் அடிப்படைத் தத்துவம்: சமயங்கள் ஒன்றுக்கொன்று விரோதமானவை அல்ல; அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பதாகும். எல்லாச் சமயங்களும் ஒரே தெய்வீக மூலத்திலிருந்து வெளிவந்தவை; வெளிப்படுத்தும் வகையில் அவற்றின் தூயதன்மை வேறுபடுகின்றது; யார் மூலமாக அவை கூறப்படுகின்றனவோ அவரது திறமைக்குத் தகுந்தவாறும் அவை வேறுபடுகின்றன என்பதாகும்.

## விவேகானந்தரின் வீரமொழிகள்

மனிதர்கள் மனிதர்களே வேண்டும். மற்ற எல்லாம் தாமே வந்துசேரும். பலம், வீரியம், நம்பிக்கை, மாசற்ற உண்மை - இவையுடைய இளைஞர்கள் தேவை. இத் தகையோர் நூறுபேர் இருந்தால் உலகில் ஒருபெரும் புரட்சியை உண்டு பண்ணிவிடலாம்.

எனக்குத் தெரிந்தவரை, இரண்டாவது அடிப்படைத் தத்துவம் சமயங்களனைத்தும் மனிதனையும் அவன் வாழ்க்கையில் எதிரிடுகின்ற பிரச்சினைகளையும் பற்றியவை என்பதும், அந்தப் பிரச்சினைகளுக்கு அவன் சரியான விடைகள் தேட வேண்டும் என்பதுமாகும். இனம், கோட்பாடு, நிறம்' பால், நாடு, வாழும் முறை, பிரச்சினைகளைச் சமாளிக்கும் முறை ஆகிய இவற்றில் வேறுபாடுகள் இருந்தாலும், அனைத்து மனிதரின் இலட்சிய முடிவு ஒன்றேயாகும். ஆகவே, சமயங்கள் தமது அடிப்படைத் தன்மையில் வித்தியாசமாக இருக்க இயலாது.

**ஆன்றோரின் அநுபவ மொழிகள்**

சிவபெருமானை ஆராதிப்பதற்கு அடையாளமாகச் சிவபக்தர்கள் எல்லோரும் மூன்று விதமான காரியங்களைச் செய்து கொண்டிருக்கவேண்டும். அவை யாவன: விபூதி பூசிக் கொள்ளுதல், ருத்திராட்சம் அணிதல், பஞ்சாட்சர மந்திரத்தை ஜெபம் செய்தல் (பஞ்சாட்சர மந்திரம் உபதேசம் ஆகாதவர்கள் 'சிவ' என்ற மந்திரத்தை ஜெபம் செய்தல்)

— மீனாட்சி புத்திரம்

இந்தப் பின்னணியில் பகவான் பாபாவின் அவதாரத் தன்மையை நாம் புரிந்து கொள்ளவேண்டும். உலகிலுள்ள எல்லாச் சமய அமைப்புகளும் இந்த அடிப்படை உண்மையை அறிந்து கொண்டதற்கு இலக்கணமாக அவர் திகழ்கின்றார். அந்த அடிப்படை உண்மை தற்கால விஞ்ஞானிகளாலும் கண்டு கொள்ளப்பட்டது. ஐஸன் பர்க் (Heisenborg) கூறியவாறு:

"நமது விருப்பங்களால் பாதிக்கப்படாத ஒரு உயர் சக்தி உள்ளது. அதுவே கடைசியில் முடிவெடுத்து தீர்மானிக்கிறது. அந்த மைய ஆற்றலுக்குப் பல்வேறு காலங்களில் பல்வேறு பெயர்களிட்டு மக்கள் அழைத்து வந்தனர். அதனை ஆத்மா அல்லது கடவுள் என்று கூறினர். இன்றுங்கூட இந்த மையத்தை அடைய எத்தனையோ வழிகள் உண்டு. விஞ்ஞானம் அவற்றில் ஒன்றாகும்."

இந்துக்களின் " **அவதாரம** " என்ற கருத்துக்கு அளவற்ற பொருளும் முக்கியத்துவமும் உள்ளன. 'உயர்சக்தி' என்று ஐஸன பர்க் கூறுவதை அது குறிக்கிறது. நமக்கு நிரந்தர விடுதலைக்கான நேரான வழியைக் காண்பிப்பதற்கும், சுய நலத்திலிருந்து பரநலத்துக்கும், இருமைத் தன்மையிலிருந்து ஒருமைத் தன்மைக்கும், மனிதத் தன்மையிலிருந்து தெய்வீகத் தன்மைக்கும் செல்லும் வழியைக் காண்பிப்பதற்கும், இறைவன் மானிட உருக்கொண்டு இறங்கி வரும் மிகவும் அபூர்வமான சம்பவத்தை அது குறிக்கிறது. பகவான் பாபாவே நமக்கு வழியும் இலட்சியமும், வழிமுறையும் ஆவார். பிரேமையே தமது உருவம் என்று பாபா கூறுகின்றார். காலங்கடந்த ஞானத்தின் திருவுருவமும் அவரே ஆவர். அவர் மேலும் கூறியது :

"மிக உயர்ந்த ஆனந்தத்தை மிக உயர்ந்த பிரேமையின் மூலம் அடைதல், இதுவே வேதாந்தத்தின் (ஞானத்தின் அந்தம்) உபதேசம். இதற்கு மாருக வேதாந்தத்தின் தத்துவக் கோட்பாடு தவருகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

**விவேகானந்தரின் வீர மொழிகள்**

**அற்பமாயுள்ள யாதொன்றையும் நாடாதே. அதை உன் கால் விரல்களாலும் தொடாதே.**

அது, ஆழ்ந்த கருத்துள்ள புத்தகங்களைப் படிப்பதல்ல, மூக்கின் வழியாகக் குறிப்பிட்ட அளவில் காற்றினை உட்செலுத்தி வெளியே அனுப்புவதல்ல, தங்குவதற்கு இடமில்லாமல் வாழ்வதல்ல. வருவாய் இல்லாமல் வாழ்வதுமல்ல, நேர்மையான வாழ்க்கை, சம நிலையுடைய வாழ்க்கை, உண்மையான வாழ்கையே வேதாந்தத்தின் விதிமுறை. வேதாந்தத்தின் அழகு வெறியர்களாலும், போலி விரிவுரையாளர்களாலும் அலங்கோலப்படுத்தப்பட்டது. வேதாந்தத்தின் கொள்கைகளுக்கு அவர்கள் பல்வேறு பொருள் நாடினர். அதன் பயனுகத் தவருன பொருள் பலகொண்டு, சிக்கலில் தவித்தனர்; தெளிவு இருந்த இடத்தில், குழப்பத்தை உருவாக்கினர். (தொடர் 100-ம் பக்கம்)

★ ★ ★ **குகன்** ★ ★ ★

## குகன்

( பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராம சாஸ்திரிகள் )

கலியுக வரதன் முருகப் பெருமான் ஓர் உருவமும் ஒரு குணமும் ஒரு பெயரும் ஓர் இடமும் இல்லாதவர். அந்த முருகப் பெருமானுக்குப் பல பெயர்கள் கூறி அர்ச்சித்து அடியவர்கள் வழிபடுகின்றனர், அவைகள் காரணப் பெயர் களாகும். முருகப் பெருமானுடைய பெருமைகளை அவை கள் உணர்த்துவதாகும். உதாரணம் : சுப்பிரமணியர் என்ற நாமம் மங்களம் நிறைந்த வேதஸ்வரூபி என்ற கருத்தை உணர்த்துவதாகும்.

கார்த்திகேயன் என்ற நாமம் கிருத்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவர் என்ற கருத்தை உணர்த்துவதாகும். ஸ்கந்தன் என்ற நாமம் சிவமாகிய பெரும் நெருப்பிலிருந்து சிறு பொறியாக வெளிவந்தவர் என்ற கருத்தை உணர்த்து வதாகும். இவ்வாறு பெயர்கள் யாவும் காரணங்கொண்டு அமையப் பெற்றனவாகும். இவைகளுள் தலை சிறந்தன வாயும் உபநிடதங்களில் போற்றிப் புகழப்படுவதும் இடப் பெயராகவும் அமைந்தது குகன் என்னும் நாமமாகும்.

கைவல்ய உபநிடத்தில்,

"மரம த்மரூபம் குகாசயம் நிஷ்களம் அத்துவித்யம்
பிர்ம யோ வேத நிஹிதம் குகாயாம்"

---

### சங்கரரின் பொன்மொழிகள் - அஞ்ஞானம்

ஆத்மா அளவிற்குட்பட்டதாயும் கட்டுப்பட்டதாயும் தோன்றுவதற்குக் காரணம் அஞ்ஞானம். அஞ்ஞானம் அழியும் பொழுது வேற்றுமையைக் கடந்த ஆத்மா வானது மேகம் நீங்கியதும் சூரியன் பிரகாசிப்பது போல் தன்னுடைய சுயரூபத்தைத் தானே விளக்கிக் காட்டும்.

---

என்று மந்திரம் காணப்படுகின்றது. இதன் கருத்து பரமான்ம சொரூபியும் கலையற்றவரும், தனக்கு நிகரற்றவரும் குகையில் உறைபவருமாகிய பரம் பொருளை எவன் அறிகின்றானோ அவன் என்பதாகும். சகல ஜீவராசிகளின் ஹிருதயாகத்தைக் குகை என்பதும் அதில் உறைபவன் குகன் என்பதும் அவனே பரம் பொருள் என்பதும் உபநிடத மந்திரத்தின் விளக்கமாகும். குகன் என்ற நாமம் இட ஆகுபெயராக அமைந்தது. அந்தக் குகன் என்னும் நாமம் சிவத்தையே குறிப்பதாகும். முருகனும் சிவனும் அபின்னமானதால் ( பிரிக்க முடியாததலால் ) முருகனுக்குச் சிறப்புப் பெயராக அமைந்தது.

" குகேதி தகராகாசஹ் வேதாந்தேஷு ச பட்யதே
தன்னிஷ்டோயம் குக : ப்ரோக்த : ஸர்வஹிருத்
கமலாஸந :"

தகராகாசத்திற்குக் குகை என்ற பெயர் வேதாந்த நூல்களில் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் குகையில் உறைவதால் குகன் என்று அழைக்கப்படுகிறான். அவன் எல்லோருடைய இருதயக் கமலத்தையும் இருப்பிடமாகக் கொண்டவன். இவ்வாறு குகன் என்ற நாமாவுக்குப் பெருமையை உபநிடதங்கள் விளக்கி உள்ளன.

முருகனடியார் எவ்வாறு விளங்குவார் ? எவ்வாறு முருகனை வழிபடுவார் ? அவர்கள் உள்ளம் எத்தகையது ? அவர்கள் பெறும் பாக்கியம் என்ன ? என்ற வினுக்களுக்கு ஏற்ற மறுமொழியாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

**சங்கரரின் பொன்மொழிகள் - அஞ்ஞானம்**

**ஆத்மா ஒன்றேயாகியது. பாகங்களாய்ப் பிரிக்க இயலாதது. உடலோ பல பாகங்களையுடையது. அப்படியிருந்தும் உலகமக்கள் அவ்விரண்டையும் ஒன்றுபோல் எண்ணுகின்றனர். இதையல்லாது வேறு எதை அஞ்ஞானம் எனக் கூறுவது ?**

வைசறைப் போதெழுந் தாறெழுத் தோதிட
வாரிதியொ டமருதீர்வை
வார்புனன் மூழ்கிவெண் ணீறப்பி யக்கமணி
மார்புறவ ணிந்திருந்து
மாசக்தி வந்தனை முடித்துமதி தவழ்சோலை
மாவைநக ரத்தில்வந்து
பொய்யெனப் புகலுமுடல் பூமியில் புரளூறப்
புரிவலஞ்செய் தெழுந்து
புண்ணியமெய் யாலயத் துட்புகுந் தன்போடு
போராளை வதனத்தனைப்
பூசைபுரி வித்தபின் ஞைசயொடு நின்கோயிற்
பொன்வாசல் முன்புநின்று
கைகளைச் சிரமீது சேர்த்துநாக் குழறிடக்
கண்ணினீ ராறுபெருகக்
களிப்பினுட ஞயிரத் தெட்டுநா மமுஞ்சொலிக்
கடம் பலரினர்ச் களைபுரிஇக்
கற்பூர வாராத்ரி கங்கண்டு கசியுமிரு
கண்ணுளார் தங்களுக்கிங்
கெவ்வகைப் போகமும் மிசைவுறச் செய்துநின்
னிணையடி யளிக்குநாத
வேழையேன் செய்தபிழை
யாதேனு முண்டாயி
னின்னேபொ
றுத்தருளுவா
யெழில்வள்ளி கணவனே
பெசழின்மாவை நேயனே
யீசகுரு நாதகுகனே.

இப்பாடலைப் பாடியவர் மாவைக் குருமணி சுவாமி குமாரசாமிக் குருக்கள் அவர்கள். இப்பெரியார் இப்பாட்டின் கடைசி அடியில் யான் செய்தபிழை யாதாயினும்

## சங்கரரின் பொன்மொழிகள்

அஞ்ஞானம்

வெளிச்சம் குறைந்த இடத்தில், ஒரு கயிறை பாம்பெனக் கருதப்படுவது போலும், முத்துச் சிப்பி வெள்ளியெனக் கருதப்படுவது போலும், அஞ்ஞானியால் உடல் ஆன்மா எனக் கருதப்படுகிறது.

உளதேல் அதனை மன்னித்தருளுக என்று வேண்டுகின்றார்.

### விவேகானந்தரின் வீர மொழிகள்

எப்போதும் இனிமையோடும் புன்னகையோடும இருப்பது ஒருவனை எம் பிரார்த்தனையைக் காட்டிலும் மிக அருகே கடவுளை அணுகச் செய்யும்.

சகலலோக குருவாக விளங்கிய சங்கரபகவத் பாதாள் முருகனைக் குறித்து சுப்பிரமணிய புஜங்கம் என்னும் நூலை ஆக்கியுள்ளார்கள். அந்த நூலில் ஒருபாட்டு பின்வரும் கருத்தை விளக்குகின்றது :

தாயும் தந்தையும் மைந்தன் செய்யும் பிழையைப் பொறுப்பதில்லையா ? சகல ஜீவராசிகளுக்கும் நீர் தந்தை· யான் உமது சிறு கைப்பிள்ளை. என் பிழையை மன்னிப்பது உமது கடமையாகும். சங்கரரின் இக்கருத்தையே பாட்டின் கடைசி அடியாகத் தொகுத்திருக்கின்றார்.

கருணைக் கடலாகிய முருகனுக்கு மன்னிப்பதே கடமையாகும். பிறவி எடுத்துப் பிழை செய்தே வாழும் மக்களுக்கு மன்னிப்புக் கேட்பது உரிமையாகும். இதனைத் தவிர வேறு எதனைக் கேட்பது ? எதனைக் கொடுப்பது ? இந்த உண்மைக் கருத்தை உள்ளத்தில் உணர்ந்து ஆசிரியர் ஏழையேன் செய்த பிழை என்ற அடியைக் கூறுகின்றார்.

★ ★ ★

### ராமகிருஷ்ணரின் உபநிஷதம்

"பருந்துகள் ஆகாயத்தில் பறக்கின்றன. வெகு உயரமாகத்தான் சுத்த வாயு மண்டலத்தில் பறக்கின்றன. ஆனாலும் அவற்றின் கண்கள் கீழே செத்தபிராணி, மாமிசம் எலும்பு இவற்றைத்தான் தேடி உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும்".

வேதாந்தமென்பது பேரன்பும் அளவற்ற அன்பும் அந்த அன்புக்குத் தத்துவார்த்த அடிப்படையுமாகும்."

பகவான் பாபா மேலும் கூறுவதாவது :

"வெவ்வேறான சமயங்கள் இருக்கட்டும். அவைகள் வளரட்டும். இறைவனின் மகிமை எல்லாமொழிகளிலும் எல்லா இராகங்களிலும் பாடப்படட்டும். அதுதான் இலட்சியமாக இருக்கவேண்டும். மத நம்பிக்கைகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளுக்கு மதிப்பளியுங்கள்; ஏனெனில் அவை ஒருமையுணர்வைச் சிதைக்கவில்லை. எந்தக் குறிப்பிட்ட சமயத்துக்காகவும் வாதாட நான் இங்கு வரவில்லை. எந்தக் குறிப்பிட்ட பிரிவினருக்காகவும், கோட்பாட்டுக்காகவும், காரணத்துக்காகவும், பிரசாரம் செய்ய நான் வரவில்லை. ஏதாவது ஒரு கொள்கையைப் பின்பற்றுவதற்கு ஆட்கள் சேர்க்கவும் நான் வரவில்லை. எல்லோருக்கும் பொதுவான ஒருமைப்பட்ட இந்த நம்பிக்கையை, அன்பு வழியை, அன்பு செலுத்த வேண்டும் என்ற கடமையை, அன்பு கொள்ள வேண்டும் என்ற பொறுப்பைப் பற்றிக் கூறவே நான் வந்திருக்கின்றேன்."

"ஒவ்வொருவரிடமும் சென்று ஒவ்வொரு மனிதரிடமும் தூங்கிக்கிடக்கும் தெய்வீக உணர்வைத் தட்டி எழுப்புவதற்காக, முழுமையான தெய்வீக சக்தி, சத்திய சாயியாக மனித சமுதாயத்துக்கு நடுவே வந்திருக்கின்றது. நீ தூங்காமல் இருப்பதாலோ, தூக்கம் அதிகமாக இருப்பதாலோ,

## சாயி பாபாவின் அருள்மொழிகள்

உலகம் வெறுங் கனவு அல்ல, அதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது. அது ஒரு திட்டத்துடன் விளையாடும் விளையாட்டு. இறைவனைக் காண்பதற்கு அது உங்களுக்கு உதவி செய்கிறது. கம்பீரமாகவும் அழகாகவும் அவரைக் கண்டு பிடியுங்கள். அன்பிலும் ஆராய்ச்சியிலும் நல்லொழுக்கத்திலும் நம்பிக்கையிலும் அவரைக் காணுங்கள்.

உறுமினுலோ, முனகினுலோ உதைத்தாலோ, குறை கூறினுலோ, சண்டையிட்டாலோ, அழுதாலோ, அப்போதும் நான் உன்னைக் கைவிடமாட்டேன். உனது தெய்வீகத் தன்மை உறங்கும்படி நான் விடமாட்டேன். குழந்தை தன் கோபத்தையும் ஆத்திரத்தையும் தாய்மேல் செலுத்தினுலும். தாய் தான் தூக்கிச் செல்லும் குழந்தையைக் கைவிடுவதும் இல்லை. கீழே விழுவதற்கு விடுவதும் இல்லை. உன்னைச் சுமந்து செல்லவும் உன் கூட வரவும் உனக்கு உதவி செய்யவும் வந்திருக்கிறேன். உன்னை என்னுல் கைவிட முடியாது. என் குழந்தைகளுக்கு நான் செய்ய வேண்டிய கடமையில் தவற மாட்டேன். என்னுடைய பணிக்கு உதவி செய்கின்ற என்னுடைய ஒவ்வொரு குழந்தைக்கும் மிகவும் நன்றியுடன் இருப்பேன்.

இம்முறையில் பகவான் பாபா அன்புணர்வினைப் போஷித்து பண்படுத்தி அனுபவிக்கச் செய்து நமது அறிவுணர்வினை விசாலப்படுத்துகிருர். நம்மிடம் அன்பு கொண்டு நம்மை நேசிக்கச் செய்து பிறரிடம் அன்பினை எதிர்பார்த்து நம்மை நேசிக்கச் செய்து சுயநலமற்ற நிபந்தனையற்ற தூய்மையான அன்புச் செயல்களைப் புரியவைத்து நம்மை நேசிக்கச் செய்து இவ்வாருக அன்பினைப் போதித்து ஒப்புயர்வற்ற உயர் நிலையை அடைவதற்குத் தகுந்த வலிமையையும் ஆவேசத்தையும் பற்றுறுதியையும் நமக்கு அளிக்கிருர். மனித சமுதாயத்தைச் சீரமைக்கும் அவரது பணியில் அவருக்குத் தகுந்த கருவிகளாக நாம் திகழ்வோமாக.

## சாயி பாபாவின் அருள்மொழிகள்

முதலில் பிரார்த்தனைக்கு உட்காரும் பொழுது கடவுளின் புகழ்பாடும் சில சுலோகங்களைப் பாடுங்கள். அதனுல் சிதறிய எண்ணங்களை ஒன்று சேர்க்க இயலும். ஜெபம் செய்யும் பொழுது நாமத்தைக் குறிக்கும் ரூபத்தை மனக்கண்முன் கொஞ்சங் கொஞ்சமாகக் கொண்டு வாருங்கள். நீங்கள் நாமத்தைப் பாடும் பொழுது உங்கள் மனது அலைந்தால் உருவமாகிய படத்தின் மீது அதைச் செலுத்துங்கள். படத்தை விட்டு அது அலைந்தால் நாமத்தின் மீது செலுத்துங்கள். இந்த அல்லது அந்த இனிமையில் அது ஆழ்ந்திருக்கட்டும். இந்த மாதிரிச் செய்வதின் மூலம் மனதைச் சுலபமாகச் சாந்தப்படுத்த முடியும்.

# ஓ! திராட்சைப் பழங்களே

திராட்சைப்பழம் நரிக்குப் புளித்த கதை எல்லாரும் அறிவீர்கள். இந்த நரி வாழ்ந்த வெகு காலத்திற்குப் பின் வாழ்ந்த நரி ஒன்று ஒருநாள் பசியால் காடு எங்கும் அலைந்து திரிந்தது. காட்டில் உணவுக்காக அலையாத இடமே இல்லை. காட்டில் காகம்தானும் பறக்கவில்லை. 'காகம் இல்லாத ஊர் கிடைக்காதே என்று சொல்வார்களே, காகம் இல்லாத காடு இருக்கிறது என்பதை நான் ஒருவன்தான் அறிவேன்.' என்று நரி தனக்குள் சொல்லிக் கொண்டது. காகம் இருந்தால் வடையோடுதான் இருக்கும்; எப்படியும் அதனை ஏமாற்றி அந்த வடையைச் சாப்பிட்டுப் பசியைச் சிறிதாவது தணித்துக் கொள்ளலாம் என நரி மனப்பால் குடித்தது.

இப்படி யோசித்து யோசித்து நடந்து கொண்டே ஒரு தோட்டத்தை வந்து அடைந்தது நரி. திராட்சைப் பழத் தோட்டம் ஒன்றில் பழங்கள் குலை குலையாகத் தொங்கின. நரிக்கு எட்டத்தக்க தூரத்திலே தொங்கின. பழங்கள் வழு வழு என்று மொழு மொழு என்றிருந்தன. பார்த்த உடனேயே நாக்கில் நீர் ஊறிற்று. அப்படியே பார்த்துக்கொண்டு நீண்ட நேரம் நின்று விட்டது. காரணம் தோட்டக்காரன் ஈதானும் நுழையாதவாறு சுற்றிவர வேலி அடைத்திருந்தான். நாவில் நீர் ஒழுக அந்த வேலியைச் சுற்றிச் சுற்றிப் பலமுறை நடந்து முடித்து விட்டது நரி, நரிக்கு ஒன்றுமே புலப்படவில்லை. பழத்தின் அழகோ நரியை அங்கிருந்து போகாமல் செய்து விட்டது. எண்ண முடியாத அளவுக்குத் தோட்டத்தை வலம் வந்து விட்டது நரி. பலமுறை சுற்றி வந்த பின் ஒரு சிறுதுவாரம் வேலியில் இருப்பதைக் கண்டது.

அத்துவாரத்தின் ஊடே மெதுவாகத் தலையை நுழைத்து கழுத்தளவில் சென்று விட்டது. உடல் செல்ல மறுத்து விட்டது. நரி அப்படியே படுத்து விட்டது. திராட்சைப் பழக் குலைகளை இப்போ அழகொழுகப் பார்க்கும் வாய்ப்புக்

கிடைத்து விட்டதில் மனதிற்கு ஒரு திருப்தி. இப்படிப் படுத்துக் கிடக்கும் போதே நரிக்கு ஒரு யோசனை பிறந்தது. இப்படியே சில நாட்களுக்குப் பட்டினி கிடந்தால் உடம்பு மெலிந்து விடும்; உடம்பு மெலிந்து விட்டால் உள்ளே செல்லலாம்; உள்ளே சென்று விட்டால் வேண்டிய அளவு திராட்சைப் பழத்தைக் குலைகுலையாகத் தின்னலாம் என்று திட்டமிட்டது.

மூன்று நாட்கள் இராப்பகலாக ஆடாமல் அசையாமல் நரி கிடந்தது. உடல் முன்பே பட்டினியால் சிறிது மெலிந்து இருந்தது. இப்போ நன்ருக மெலிந்து விட்டது. சிறிது சிரமத்துடன் உள்ளே புகுந்து விட்டது. மிகப்பெரிய ஆவலோடு வேண்டு மட்டும் பழங்களைத் தின்றது. தன்னுடைய உபாயம் பலித்ததையிட்டு நரிக்குப் பெருமகிழ்ச்சி. ஒரு மாசத்திற்கு உணவே தேவையில்லை என்ற அளவுக்கு நரி மகிழ்ச்சியுடன் படுத்துக் கிடந்தது. ஏதோ சலசலப்புக் கேட்டது. தூரத்திலே நாய் ஒன்று குரைக்கும் சத்தமும் கேட்டது. நரிக்குப் பயம் தொட்டு விட்டது, தோட்டத்தை விட்டுச் சென்றுவிடவேண்டும் என்று எண்ணம் கொண்டது. ஓடிச்சென்று முன்னர் உட்புகுந்த துவாரத்தில் தலையை நுழைத்தது. கழுத்தளவிலே தான் சென்றது. உடல் செல்ல மறுத்து விட்டது, மறுபடியும் தலை தோட்டத்திற்கு வெளியேயும் உடல் தோட்டத்திற்கு உள்ளேயும் இருக்கத்தக்கதாக நரி படுத்து விட்டது.

நரி ஆழ்ந்த யோசனை செய்தது. மறுபடியும் மெலிந்தாலே தவிர வெளியே செல்ல மார்க்கமில்லை என்பதைக் கண்டது. இந்த நேரத்தில் தோட்டக்காரன் வந்தால் என்கதி என்ன என்று சிந்தித்தது. பயத்தினுல் உடல் நடுக்கம் எடுத்தது. அந்த நடுக்கத்தில் உடல் கெதியாகவே மெலிவடையத் தொடங்கி விட்டது. திராட்சைப் பழத்தைத் திரும்பிப் பார்க்கவே

### விவேகானந்தரின் வீரமொழிகள்

**நமது பிரார்த்தனைகள் ஈசனை நம் அனைவரின் தந்தை என ஒப்புக் கொண்டு நமது தினசரி வாழ்வில் ஒவ்வொரு மனிதனையும் தமது சகோதரனுக நடத்தாது போனுல் அவ்விதப் பிரார்த்தனையால் யாது பயன்?**

அஞ்சியது. மூன்று நாட்கள் மிகப் பயத்துடன் கழிந்தன. உடலும் நன்றாக மெலிவடைந்து விட்டது. தள்ளாடிக் கொண்டே நரி ஒருவாறு வெளியேறியது. இப்போ பயம் தீர்ந்து விட்டது. திராட்சைத் தோட்டத்தைத் திரும்பிப் பார்த்தது. பழங்கள் குலைகுலையாகத் தொங்கி .வழு வழு என்று, மொழு மொழு என்று காட்சி அளித்தன. நரி தான் பட்ட அநுபவத்தை உன்னிப் பார்த்து. தோட்டத்தைப் பார்த்து பின் வருமாறு பேசியது :

" ஏ, தோட்டமே! உனது அழகை என்ன என்று சொல்வது ! உனது பழங்களின் ருசியை எப்படி வருணிப்பது ! ஆனால், உன்னால் யான் என்ன பயனை அடைந்தேன்? நான் பட்டபாட்டிற்கும் செய்த சூழ்ச்சிக்கும் பதிலாக இப்போது நான் பெற்றுள்ள பலன் ஒன்றையும் காணேன் !" என்று ஏக்கத்துடன் உரைத்தது.

மக்களின் நிலையும் இதுவேதான். பிறக்கும் பொழுது வெறும் உடலோடு பிறக்கின்றோம்; இறக்கும்போதும் வெறும் உடலோடு தான் இறத்தல் வேண்டும். நாம் இங்கே பட்ட பாட்டிற்கெல்லாம் பலனாக ஒன்றையாவது நாம் இறக்கும் போது கையில் எடுத்துச் செல்ல முடியாது போகிறது.

" காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே. " என்பதே உண்மை. ஆனாலும், நாம் நம்முடன் எடுத்துச் செல்லும் பொருள் ஒன்று மட்டும் உண்டு ; அது யாதெனில், யாம் செய்த செயல்களின் பயனே. நம்மைச் சேர்ந்த எல்லாம் சுடுகாடு மட்டுந்தான் என்பது வெளிப்படை.

"அத்தமும் வாழ்வு மகத்துமட்டே ! விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே; விம்மி விம்மியிரு
கைத்தல மேல்வைத் தழுமைந் தருஞ்சுடு காடுமட்டே;
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே !!

என்ற பட்டினத்தடிகளின் பாடலைப் பன் முறை சிந்திப்போமாக !

# ★★★★★ பூஜை ★★★★★

பாண்டவர்களுக்கு ஐந்து வீடாயினும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற கருத்தில் கண்ணபெருமான் துரியோதன னுதியரிடம் தூது சென்றார். 'ஈ இருக்குமிடமெனினும் அவர்க்கு இடம் கொடேன்' எனத் துரியோதனன் கூறிவிட்டான். கண்ணபிரான் அஸ்தினபுரத்திலிருந்து சௌராஷ்டிர தேசத்திற்கூடாக வருவதைச் சௌராஷ்டிர தேசத்தரசன் கேள்விப்பட்டான். கண்ணன் தன்னுடைய தேசத்திற்கூடாக வருவதைப் பெரும்பேறெனக் கருதினன், உடனே நகரை அலங்கரிக்குமாறு கட்டளையிட்டான், கண்ணனுக்குப் பூஜை செய்து தன்னுடைய பிறப்பைப் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும் என்பதும் அரசனுடைய ஆசை. கண்ணன் நகருக்குள் வராது வேறு பாதை வழியே திரும்பினலும் திரும்பி விடலாம் என்றும் அஞ்சப்பட்டது. அந்த அச்சத்தினல் ஆங்காங்கு முக்கிய அதிகாரிகளை நிறுத்தி எப்படியும் கண்ணனுடைய காலில் விழுந்தாவது நகருக்கு அழைத்து வரவேண்டும் என்பதே அரசனுடைய ஏற்பாடாகும்.

மந்திரி எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்து அரசனிடம் வந்தார். ''ஏற்பாடுகள் எல்லாம் நன்ருயிருக்கிறதா?'' ''ஒரு வீடு தவருமல் கண்ணன் வரும் வழியிலுள்ள அத்தனை

---

**விவேகானந்தரின் உபதேச மொழிகள்**

உலக மதங்கள் உயிரற்றுக் கேலிகளாய் விட்டன. உலகம் வேண்டுவது ஒழுக்கமே. தன்னலமற்றதான ஒரே அன்புமயமாய் எரியும் வாழ்க்கையுடையாரே உலகிற்குத் தேவை. அந்த அன்பே ஒவ்வொரு வார்த்தையையும் இடியேறு போன்று வலிமை பொருந்தியதாக்கும்.

---

பேரும் கண்ணனை வரவேற்ப தற்கு தங்கள் வீட்டில் நடை பெறும் மணவிழாப் போல அலங்கரித்து மகிழ்வுடன் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் ஆனால்...'' ''என்ன? ஆனால் என்று ஒரு சந்தேகம் வருகிறதே! கெதியாய்க் கூறும்!''

''முதன் முதல் பூஜை செய்யும் வாய்ப்பு அரசருக்குக் கிட்டாமல் போகலாம்,''

**விவேகானந்தரின் உபதேச மொழிகள்**

இறைவனை நம்பாதவனை நாஸ்திகன் என்றன பழைய மதங்கள் தன்பால் நம்பிக்கையற்றவனை நாஸ்திகன் என்கிறது புதிய மதம்.

''அப்படியா? எனது இராச்சியத்தில் எனக்கு இடையூறாக ஒருவன் முளைப்பதா? யார் எனக் கூறுவீராக.''

''ஏழைத்தச்சன் ஒருவன் கண்ணன் தன்னுடைய வீட்டிற்கு வருவான் என எதிர்பார்த்திருக்கின்றான்.''

''அரசனுடைய மரியாதையை ஏற்றுக் கொள்ளாமல் ஏழைத் தச்சனுடைய வீட்டில் கண்ணன் சென்று முதல் பூஜை ஏற்றுக்கொள்வதா? இதனை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியாது.''

''கண்ணனுக்கு அரசனும் ஆண்டியும் ஒன்றே.''

''கண்ணனுடைய முதற் பூஜையைப் பெறுவதற்கு ஏழைத் தச்சனுடைய காலில் விழவேண்டியிருக்கிறது. மந்திரி! நீரே நேரில் சென்று அரண்மனையில் கண்ணனுக்கு நடைபெறும் பூஜையில் தச்சனைப் பங்கு கொள்ளுமாறு அழைத்ததாகக் கூறிக் கையோடு அழைத்து வாரும்.''

மந்திரியினுடைய தேர் ஏழைத் தச்சனுடைய குடிசையை நோக்கிப் பறந்தது. ஏழைத் தச்சனோ தன்னுடைய குடிசைக்கு முன் தேர் வந்து நின்றதைக் கண் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. துளசிப் பத்திரங்களை எடுத்தெடுத்து மாலையாகத் தொடுத்தலிலே ஈடுபட்டிருந்தான். வாயோ கண்ணனைப் பற்றி ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தது. கண்கள் நீர்மல்கிக் காணப்பட்டன. ஏழைத்தச்சனுடைய குடிசையோ தென்னங் கீற்றாலும் பனை ஓலையாலும் வேயப் பெற்றது. கூரைக் கூடாக சூரியனும் சந்திரனும் புகுந்து

குடிசையினுள் விளையாடின. இந்த இலட்சணம் பொருந்திய குடிசையின் முகப்பிலே ஏழைத் தச்சன் ஒரு மாதமாகப் பாடுபட்டுச் செய்த ஒரு வளைவு பொருத்தப்பட்டிருந்தது. அதில் "கண்ணா உன் குடிசைக்கு வா" என்று எழுதப் பட்டிருந்தது. ஏழைத்தச்சன் தன்னை மறந்து கண்ணனே தானாகி மாலை தொடுத்துக் கொண்டிருந்த தருணத்தில் மந்திரி, பெரியவரே, என்றார். ஏழைத் தச்சன் நிமிர்ந்து பார்த்தான். கண்களில் நீர்மல்க, "தங்களை நீண்டநேரம் காக்க வைத்து விட்டேன் போலும்! மன்னிக்க வேண்டும்" என்றான். பெரியவரே! தங்களுக்கு அரண்மனையிலிருந்து அழைப்பு வந்திருக்கிறது. கண்ணனுக்கு அரசன் ஆடம்பர மான பூஜை செய்கிறார். அதற்குத் தங்களை அழைத்துள் ளார். உடனே தேரில் ஏறுங்கள். இந்த இராட்சியத்தில் எவர்க்கும் கிடைக்காத பேறு உங்களுக்குக் கிடைத்துள்ளது. என்ன யோசிக்கிறீர்கள்? இது எல்லாருக்கும் கிடைக்கக் கூடியதொன்றல்ல. அரசனுடைய அழைப்பை உடனே ஏற்றுக்கொள்ளுங்கள்.''

''அரண்மனைப் பூஜைக்கும் ஏழைத் தச்சனுடைய பூஜைக் கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் அல்லவா ஏழைத் தச்சன் அங்கு வர விரும்பவில்லை என்று அரசருக்குக் கூறவும். ஏழைத் தச்சனுக்கு இந்தக் குடிசையேதான் சொர்க்கம்.''

மந்திரி சிரித்தார். 'கண்ணனுடைய பூஜையைப் பார்ப் பதற்கு பெரியவருக்கு விருப்பம் இல்லைப் போலும். கண்ணன் ஏழை பங்காளன் அல்லவா? அவன் ஏழைகளின் குடிசையை நாடி வராவிட்டால் வேறு யார்தான் வரப்போகிறார்கள்! கண்ணன் ஏழையின் குடி சைக்கு வராதொழிந்தால், தீன பந்து, தீனதயாளன் என்ற பெயர்கள் அவனுக்கு இல்லாது போகட்டும்.' (தொடரும்)

**சுவாமி விவேகானந்தரின் உபதேச மொழிகள்**

வரையறை கடந்த கனவு காண் போனான மனிதன் வரையறைக் குட்பட்ட கனவுகளைக் காண்கிறான்!

# ஆனி மாத நினைவுகள்

15-06-90 வெள்ளி – ஆனி மாதப் பிறப்பு.

18-06-90 திங்கள் - சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி கோயில் கொடியேற்றம்.

19-06-90 செவ்வாய் - ஏகாதசி விரதம்.

20-06-90 புதன் - பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம்.

20-06-90 புதன் - சிதம்பரம் கொடியேற்றம், சாவகச்சேரி வாரிவனநாதர் கோயில் கொடியேற்றம்.

22-06-90 வெள்ளி-அமாவாசை, ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் கோயில் கொடியேற்றம்.

23-06-90 சனி - பொலிகண்டி கந்தசுவாமி கோயில் கொடியேற்றம்.

27-06-90 புதன் – மணிவாசகர் குருபூசை, முத்துத் தாண்டவர் குருபூசை, மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கொடியேற்றம்.

28-06-90 வியாழன் - அமர்நீதி நாயனார் குருபூஜை, குமாரசஷ்டி விரதம், சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி கோயில் தேர், சாவகச்சேரி வாரிவன நாதர் கோயில் தேர்.

29-06-90 வெள்ளி – சாவகச்சேரி வாரிவனநாதர் – தீர்த்தம், சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோயில் தீர்த்தம், ஆனி உத்தரம்.

30-06-90 சனி – அருளம்பல சுவாமிகள் குருபூஜை.

02-07-90 திங்கள் - பெரியாழ்வார் குருபூஜை.

05-07-90 வியாழன் - பிரதோஷ விரதம்.

06-07-90 வெள்ளி - ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் கோயில் தேர், பொலிகண்டி கந்தசுவாமி கோயில் தேர்.

07-07-90 சனி – மேற்படி கோயில்கள் தீர்த்தம், பூரணை விரதம், வியாச பூரணை.

15-07-90 ஞாயிறு – கலிக்காமநாயனார் குருபூஜை, ஸ்ரீமந்நாத முனிவர் குருபூஜை.

16-07-90 திங்கள் - தக்ஷிணாயன புண்ணியகாலம்.



மில்க்வைற் தொழிலகம்

MWS
MILKWHITE

# மில்க்வைற் அண்மை வெளியீடுகள்

- உலகப் பொதுப் பிரார்த்தனை.
- உலகப் பொதுமறை
- கவியோகி சுத்தானந்த பாரதியார்உருவப்படம்
- குருகுல அமைப்பாளரும் "அப்புஜி" என மதிப்பாக அழைக்கப்பட்டவருமான அமரர் வே. கதிரவேலு அவர்களின் உருவப்படம்,

இவை அனைத்தையும் மில்க்வைற் மேலுறைகளிலிருந்து 25 திருக்குறள் அல்லது ரூபா 5/, க்கான அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

ஒளிவிளக்காயினும் தூண்டுகோல் அவசியம்.

ஆதரவு வளர நற்பணி பெருகும்,

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

---

நீங்கள் நீண்டநேரம் தியானத்தில் இருந்து இறைவனைப் பிரார்த்திப்பதற்கு உதவுவன

★ ஜெயந்தி பத்திகள்

★ அண்ணா ,,

★ துர்க்கா ,,

★ கோகுல் ,,

இறைவனை ஒளிமயமாகத் தரிசிப்பதற்கு உகந்தது சிவன் மார்க் சூடங்கள்.

தயாரிப்பாளர்கள்:

அண்ணா தொழிலகம்

இணுவில்.

Registered as a Newspaper at the General Post Office in Sri Lanka.


# பூநகரி ப. நோ. கூ. சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

- ☐ புடவை வகைகள்
- ☐ பாடசாலை உபகரணங்கள்
- ☐ உரம் கிருமி நாசினி களை கொல்லிகள்
- ☐ கட்டடப் பொருட்கள்
- ☐ எரி பொருட்கள்
- ☐ நுகர்ச்சிப் பொருட்கள்
- ☐ நெல் கொள்வனவு
- ☐ அரிசி ஆலை (உற்பத்திப் பகுதி, பாவனையாளர் பகுதி)
- ☐ கேரதீவு - சங்குப்பிட்டி (வள்ளம் பாதைச் சேவை)
- ☐ ஒப்பந்த வேலைகள்
- ☐ கூட்டுறவு மகளிர் சுயவேலைவாய்ப்புத் திட்டம் (பனம் தும்பு அடித்தல், வாழை நார் தும்பு அடித்தல், கால்நடை வளர்ப்ப. கற்பூரம் உற்பத்தி)

உள்ளூர் உற்பத்திக் கொள்வனவும், சந்தைப்படுத்தலும் போன்ற பல துறைகளை உள்ளடக்கிய சேவைகளைச் செய்து வருகின்றது.

மக்களின் தேவை

## பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சேவை.

**Duty is power which rises with us in the morning and goes to bed with us in the evening.**


இப் பிரசுரம் கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர், திரு. க. துரைராசா அவர்களால், கிளிநொச்சி 7-ம் வாய்க்கால் "குருகுலம்" என்ற மூகவரியிலுள்ள சர்வசக்தி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.